# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 15 (29-03-1998) ஞாயிற்றுக்கிழமை UTHAYAN–A Lively National Tamil Daily கதிர்:104

# நம்பிக்கை வாக்கெடுப்பில் வாஜ்பாய் அரசு வென்றது!



## ஆதரவு 274; எதிர்ப்பு 261

புதுடில்லி, மார்ச் 29

பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு மீதான நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை நேற்று 13 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றது. அரசுக்கு ஆதரவாக 274 வாக்குகளும் எதிராக 261 வாக்குகளும் கிடைத்தன.

வாஜ்பாய் அரசு மீதான நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்றுஇரண்டாவது நாளாக சூடாக நடைபெற்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தெலுங்குதேசம் ஆதரித்துவாக்களிப்பு சபையில் நேற்று கூச்சல், குழப்பம்

புதுடில்லி, மார்ச் 29

வாஜ்பாய் அரசு மீதான நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பில் தெலுங்கு தேசம் ஆதரவாக வாக்களித்தது.

காங்கிரஸ் கட்சி பின்கதவால் நுழைவதை தாம் அனுமதிக்க முடியாது என்று தெலுங்கு தேச உறுப்பினர் ஒருவர் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

நம்பிக்கைத் தீர்மானம் மீதான விவாதம் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றபோது கூச்சல்கள், குழப்பங்கள், குறுக்கீடுகள் பெரும் அளவில் இடம்பெற்றன. சூடான வாதப் பிரதி வாதங்கள் இடம்பெற்றன.

சபாநாயகர் ஜி. எம். ஜி. பாலயோகி பல தடவைகள் உரத்த குரலில் உறுப்பினர்களை ஆசனத்தில் அமரும்படி கோரியும் உறுப்பினர்கள் அவரைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. (இ)

## வாக்கெடுப்பு நேரம் சுவாமி சபையில் இல்லை

புதுடில்லி, மார்ச் 29

வாஜ்பாய் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நேரம் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி சபையில் இருக்கவில்லை.

தமிழ் நாட்டில் பாரதீய ஜனதா உள்ளடக்கிய அ. தி. மு. க. கூட்டணியில் சுப்பிரமணிய சுவாமியும் இணைந்து போட்டியிட்டது தெரிந்ததே.

மற்றும் நியமன எம். பிக்கள் இருவர் தெலுங்குதேச எம். பிக்கள் 11 பேர் (சபாநாயகர் தவிர்த்து) அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

காஷ்மீர் மாநில தேசிய மாநாட்டுக் கட்சி எம். பிக்கள் இருவர் வாக்கெடுப்பின் போது நடுநிலைமை வகித்தனர்.

(இ-9-7)

## படையினர் தேடுதல்

நல்லூர் அரசடிப் பகுதி நேற்றுக் காலை திடீரென படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

சுற்றிவளைப்பின் போது படையினர் மக்களைவீதிக்கு அழைத்து வந்து அடையாள அட்டைகளைப் பரிசோதனை செய்தனர். இச்சுற்றிவளைப்பின்போது எவரும் கைதானதாகத் தெரியவில்லை.

(இ-9-ரி)

## நிந்தவூர் தாக்குதல் இலக்கு தாமே என்கின்றார் அஷ்ரப்!

கொழும்பு, மார்ச் 29

நிந்தவூரில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல் தமக்கு இலக்கு வைத்தே நடத்தப்பட்டது என்று கப்பல் துறைமுக புனர்வாழ்வு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் பிரதான வீதியில் உள்ள மருந்துக்கடை (பார்மஸி) ஒன்றின் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலில் முஸ்லிம் ஊர்காவலர் ஒருவர் கொல்லப்பட்டதும் நான்கு முஸ்லிம் இளைஞர்கள் காயமடைந்ததும் தெரிந்தவையே.

இத்தாக்குதல் இடம்பெறுவதற்கு சற்று முன்னர் தான் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் கல்முனையில்இருந்து ஒலுவிலில் நடைபெறும் ஒரு பிரசாரக் கூட்டத்துக்காக வாகன அணியாக அந்த வழியால் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று கல்முனையில் நடைபெற்ற ஹற்றன் நாஷனல் வங்கி கிளை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிக'ழ்த்துகையில் தமக்கு இலக்கு வைத்தே நிந்தவூரில் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமைச்சர் அஷ்ரப் கூறினார்.

அங்கு அவர் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

வெள்ளி இரவு நான் கல்முனையிலிருந்து ஒலுவிலுக்குச் சென்ற சமயம் இரவு 8.45 மணியளவில் எம்மைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் குழு ஒன்று நிந்தவூர் தபாலகத்துக்கு அருகில் காத்திருந்து தாக்குதல் மேற்கொண்டது.

இதில்ஓர் ஊர்காவல் படை உறுப்பினர் கொல்லப்பட்டார். பொதுமக்கள் பலர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமான பயணிகள் கவனத்திற்கு

நாளை திங்கட்கிழமை முதல் மூன்றாவது விமானத்தில் கொழும்புக்குப் பயணம் செய்யும் பயணிகள் நண்பகல் பதினொரு மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருகை தருமாறு சிவில் நிர்வாக காரியாலய அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

முதலாவது, இரண்டாவது விமானங்களில் பயணம் செய்வோர் வழமைபோல காலை எட்டு மணிக்கே யாழ். ரயில் நிலையத்துக்குச் செல்ல வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (இ-9)

## மாங்குளம், ஒலுமடு பகுதிகளில் மோதல்

வவுனியா, மார்ச் 29

வெற்றி உறுதி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் மாங்குளம், ஒலுமடுப் பகுதிகளில் மூன்று படையினர் காயமடைந்ததாகவும், மூன்று புலிகள் கொல்லப்பட்டதாகவும் வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீரவேங்கை சுகிர்தராஜன் (பாலசுப்பிரமணியம் அசோக்குமார் — மட்டக்களப்பு), வீரவேங்கை காண்டியூரான்(கமலதாஸ் ரெயிஸ்ராஜ் — மட்டக்களப்பு), வீரவேங்கை ராஜன் அல்லது புரட்சி (ஆனந்தராஜா புஸ்பாகரன் — திருமலை ஆகியோரே களப்பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7-9-164)

## மத்தியஸ்த முயற்சிக்கு பிரிட்டன் 'அவசரப்படாது

### தொழிற்கட்சிஎம்.பி.தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 29

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் மூன்றாம் தரப்பாக செயற்படும் விடயத்தில் பிரிட்டிஷ் அரசு அவசரமாக முடிவுக்குவராது.

இப்படி பிரிட்டிஷ் தொழிற்கட்சி எம். பி. மெக்னாட் தேசாய்பிரபு தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி— உலக வங்கி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பிரிட்டிஷ் அரசை மூன்றாம் தரப்பாகச் செயற்படுமாறு இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் கோர வேண்டும்.

முன்னைய பிரிட்டிஷ் அரச அமைச்சரான லியொம் பொக்ஸ் இவ் விடயத்தில் பல முயற்சிகளை எடுத்தார்.

தொழிற்கட்சி அரசைப் பொறுத்தவரை திறந்த, நியாயமான கொள்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப இலங்கை அரசின் போக்கு பிரிட்டிஷ் எம். பிக்கு விளங்கிப் போச்சு போல...!

## பொருளியல் ஆசிரியர் யாழ். நகரில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். நகரில் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் ஒருவரும் அவரது உறவினரும் நேற்று முன்தினம் இரவு பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

பொருளியல் ஆசிரியர் வரதராஜன் அவரது உதவியாளர் சிறி ஆகியோரே கைதானவர்கள் ஆவர்.

இரவு 8 மணி அளவில் அவரது வீட்டைச் சுற்றிவளைத்த பொலீஸார் ஆசிரியரை முதலில் குடும்பத்துடன் கைது செய்தனர். பின்னர் குடும்பத்தவர் விடுவிக்கப்பட ஆசிரியரும் உறவினரும் பொலீஸாரால் அழைத்துச் செல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு ஆளுநர் நேற்று வவுனியா விஜயம்

### கப்பல் வசதி குறித்து உறுதி

வவுனியா, மார்ச் 29

வடக்கு — கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

கப்பல் வசதிகளைச்செய்து தரக் கோரி உண்ணாவிரதம் இருந்தவர்களையும் அவர் சந்தித்தார்.

கப்பல் சேவையைச் சீராக்குவது தொடர்பாக தாம் ஏற்கனவே ஜனாதிபதியுடன் கதைத்துள்ளதாகவும் மேலும் தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

பூந்தோட்ட அகதி முகா

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வநாயகி திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற ஆசிரியை, ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்)

திருமதி செல்வநாயகி திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற ஆசிரியை, ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்) சனிக்கிழமை (28 – 03 – 98) சிவபதமடைந்தார்.

அன்னார் தியாகராசா திருநாவுக்கரசுவின் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும், ஜெய மோகன் (லண்டன்), விஜிதா (கொழும்பு), யசோதா (ஆசிரியர், முன்சேவைப் பயிற்சி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்ப ராணி (லண்டன்), கைலைவாசன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், நக்கீரன் (லண்டன்), ஆரூரன் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் (29-03-98) இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல. 55 (109) கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*தியாகராசா திருநாவுக்கரசு*
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
(தபாலதிபர், கிளானி தபால் முகவர் நிலையம்)
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (54406)

## சுப்பிரமணியம் பத்மநாதன்

இளைப்பாறிய பதவிநிலை உதவியாளர், கச்சேரி, திருகோணமலை)

பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பத்மநாதன் 26-03-98 அன்று காலமானார்.

இவர் நவமணியின் அன்புக் கணவரும், ஜெய குமாரி (உதவிக் கணக்காளர், எம்அன்ட் ச் புறோஜெக்ஸ்—கொழும்பு), கமலகுமாரி, இராசேந்திரன் (டென்மார்க்), யோகேந்திரன் (டென்மார்க்), ஞானேந்திரன் (இயல்இசைவாரிதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சலிங்கம் (டென்மார்க்), ஆனந்தராணி (டென்மார்க்) ஆகியோரின் அன்புமாமனாரும், கஸ்தூரி (டென்மார்க்), வர்ணஜா (டென்மார்க்) ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-03-98 பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ப. ஞானேந்திரன்
(மகன்)
கந்தஉடையார் லேன்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (சி/3252)

## பயஸ் ஜோசப் பெனடிக்ற்

(சத்தியநேசன்)

108, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயஸ் ஜோசப் பெனடிக்ற் 27-3-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பயஸ் — முத்தம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், அன்னமேரியின் அன்புக் கணவரும், ஜெயா (கனடா), ராணி, நிர்மலா (கனடா), மல்லிகா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராணி (கனடா), வேதநாயகம் (நாடாளுமன்றம், கோட்டை) அன்ட்று ஜோசப் (கனடா), சண்ணன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், பேர்சியின் அன்புச் சகோதரனும், லக்ஷிகா (A/L மாணவி, திருக்குடும்பக் கன்னியர்மடம்), மயூரன (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), நிக்கோன், குளோரி, கரீன், பவித்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-3-98) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ராணி வேதநாயகம்*
108, புகையிரத நிலைய வீதி, (மகள்)
யாழ்ப்பாணம். (54385)

## திருமதி வல்லிபுரம் செல்லம்மா

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கில் தற்காலிகமாக வசித்தவருமான திருமதி வ. செல்லம்மா நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையர் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, இராசமலர், நகுலேஸ் (Rtd. Asst. Supt. of Surveyor, தற்போது Defence Ministry, Oman) ஆகியோரின் அன்புத் தாயாரும், வே. கனகரத்தினம், செந்தில்தேவி ஆகியோரின் மாமியாரும், செ. பகீரதன் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), மதிவதனி (தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), கீதாஞ்சலி, பிரியதர்சினி, சூரியகுமார், மாலினி, மீரா (பொறியியல் பீடம், பேராதனை), ஆனந்தராணி ஆகியோரின் பேர்த்தியும், கோகிலன், நவநீதன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-3-98) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
(54415) செ. பகீரதன் (பேரன்)

## தீக்காயத்துடன் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 29

குடும்பத்தகராறு காரணமாகத் தனக்குத் தானே தீ மூட்டியதாகப் படுகாயம் அடைந்த நிலையில் ஒருவர் கடந்த புதனன்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஜெயக்குமார் மதனரோகிணி (வயது 26) என்பவரே தீப்பற்றிப் படுகாயமடைந்தவராவார். (ஐ-15-139)


A/L 2000
Pure/App.
Mr. சிவலோகநாதன்
CHE. Mr. மகேஸ்வரன்
PHY. Mr. ஸ்பெல்மன்

பயிற்சிப் பரீட்சைகளுடன்
★ O/L, yr. 10, 9 & 8
★ புலமைப்பரிசில் Yr. 5
★ Spoken English
SHAMROCK
(54405)

விற்பனையாகிறது
MACMILLAN
OLIVER TWIST
CHARLES DICKENS
வாசகர்கள் எதிர்பார்த்திருந்த
தென் இந்திய வாரமாத சஞ்சிகைகள் விற்பனையாகின்றன.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(54412)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
மோகன் - அம்பிகா
கவுண்டமணி, செந்தில்
நடித்த
இதயக் கோயில்
திங்கள், செவ்வாய்
சங்கர், நளினி
சந்திரசேகர் நடித்த
'ஒருதலை ராகம்'
நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 - 212223
(54347)

யாழ்.
றீகல் வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
சரத்குமார்
(இரு வேடங்களில்)
தேவயானி
நடித்த
சூரியவம்சம்
அடுத்த வெளியீடு
குருதிப் புனல்
தினசரி:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தெ.பே.இ. 021 - 2999
(54413)

நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
29 - 03 - 98 முதல்
கரன் - குஷ்பு
நடித்த
கலர்கனவுகள்
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)



## முக்கிய அறிவித்தல்

திரு. S. வரதராஜன் ஆசிரியரிடம் கல்விகற்கும் பொருளியல் மாணவர்கள் அனைவரையும் இன்று (29 — 03 — 1998) கல்லூரிக்கு சமூகம் தருமாறுஅறிவிக்கின்றோம்.

நிர்வாகி
பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
( 54414 )

## வாழ்த்துகின்றோம்

18 – 03 – 1998 இல் மல்லாகம் நீதிபதி
உயர்திரு. எம். திருநாவுக்கரசு
அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிவானாக பதவி ஏற்றுக்கொண்ட



உயர்திரு.
**சின்னத்தம்பி செல்லத்துரை**
[ஜே. பி.]
(கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க உப-தலைவரும், சுன்னாகம் ப. நோ. கூ. சங்க தாவடிக் கிளைச் செயலாளரும்)
அவர்களை வாழ்த்துகின்றோம்.

ரவி ஐயர்
தாவடி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.
தாவடி தெற்கு,
கொக்குவில். (சி/3222)

## வாழ்த்துகின்றோம்

இன்று கௌரவ பாராட்டுப் பட்டமளிப்புப் பெருவிழாக் காணும்
கவிமாமணி, இயலிசைவாரிதி, கலாரத்நா, கலாபூஷணம்
பிரம்மஸ்ரீ
**மா. த. ந. வீரமணி ஐயர்**
அவர்கள்

நீடூழி காலம் வாழ்ந்து சேவைகளை ஆற்ற வேண்டும் என்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளையும் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளையும் பிரார்த்தித்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கிரியா கலாபமுக்தாமணி*
*சிவஸ்ரீ ஐ. மஹேஸ்வரக் குருக்கள் குடும்பம்*
ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயம்,
(54395) சுதுமலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 04 — 05 — 1950



விண்ணில்; 09 — 04 — 1997

திருமதி
**மகாதேவா நிர்மலாதேவி**

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழ நின்ற
முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை எம்மனத்தே வைத்தேனே

அப்பா, கணவன், பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை.
சம்பியன் லேன்,
கொக்குவில். (54401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தேடிய பல்துறைக் கலைஞர் வீரமணி ஐயர்

## இன்று அவருக்கு மகாவித்துவான் பட்டமளிப்பு

கலையும் சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. அத்தகைய கலையின் மூலம் சமயத்தை வளர்க்கும் பேறுபெற்றவன் கலைஞன். இன்று மகாவித்துவான் பட்டம் பெறும் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அத்தகைய கலைஞர்கள் வரிசையில் சிறப்பிடம் பெறுகின்றார்.

இசைக் கலைஞர்களும், இயற்றதமிழ் வல்லுநர்களும் நிறைந்து விளங்கும் யாழ்ப்பாணத்து இணுவையம்பதியில் வாழையடி வாழையாக கலைப் பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பத்தில் இவர் பிறந்தார். சமஸ்கிருதம், தமிழ், ஆங்கில மொழிகளில் தனது இளமைக்காலம் முதல் கீர்த்தனைகள், நாட்டிய நாடகங்கள், வெண்பாக்கள், கவிதைகள், வாழ்த்துப்பாக்கள் போன்ற ஆக்கங்களை உருவாக்கியதோடு அவற்றுக்கு இசை கூட்டி வழங்கும் முறையையும் உருவாக்கியவர்.

கர்நாடக இசை உலகிற்கு ஒரு வரப்பிரசாதம் எனக் கூறத்தக்க வகையில் இவர் கலைஞர்களதும், ரசிகர்களதும் தரத்திற்கும், சுவை மட்டத்துக்கும் ஏற்ற வகையில் பல்வேறு பாடல்களை உருவாக்கினார். இவர் உருவாக்கிய பாடல்கள் இன்று உலகின் மூலை முடுக்குகள் எங்கும் நாளாந்தம் ஒலித்த வண்ணம் இருக்கின்றன.

தென்னிந்தியாவிலுள்ள சாகித்திய கர்த்தாக்கள் பலரும் இயற்கை வனப்புக்கள் நிறைந்ததும், அமைதியானதுமான சூழலை மையமாகக் கொண்டே தமது ஆக்கங்களைப் படைப்பவர்கள். ஆனால் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரோ தான் இருக்கும் இடம் எதுவோ அந்தச் சூழலைமையமாகக் கொண்டு தனது சாகித்தியத்தை உருவாக்கி விடுவார். கதிர்காமக் கந்தனை ஒரு சமயம் தரிசிக்கச் சென்ற போது அவ்விடத்தின் இயற்கை அழகையும், அங்கு நின்ற பக்தர்களின் பக்திப் பிரவாகத்தையும் கண்டு கதிர்காமக் கந்தனின் வாசலில் இருந்தபடி ஒரே வேகத்தில் கந்தன் புகழ்பாடும் 108 பாடல்களைப் பாடி முடித்தார். இது அவரது திறமைக்குச் சான்றாகும்.

எமது நாட்டில் உள்ள பல ஆலயங்களுக்கான ஊஞ்சல் பாட்டுக்களைப் பாடியதோடு அந்த ஆலயங்களின் பெருமையை உலகறிய எடுத்துரைத்த சாதனையும் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரையே சாரும். யாழ்.பல்கலைக்கழக வளாகப் பகுதியில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயம், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் முதலியன இத்தகைய பெருமைமிக்க ஆலயங்களில் சிலவாகும்.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைச் சேர்த்து நாட்டிய நாடகங்கள் உருவாக்குவதிலும் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் தலைசிறந்தவர். யாழ். குடாநாட்டில் இன்று வழக்கிலிருக்கும் நாட்டிய நாடகங்கள் இவரது கைவண்ணத்தைக் காட்டுகின்றன. ஒன்பது விதமான ரச பாவனைகளையும் இந்த நாட்டிய நாடகங்கள் கொண்டுள்ளன.



இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் வீரமணி ஐயரின் புகழ் நிலைத்திருக்கிறது. தென்னகத்து மயிலையில் கோயில் கொண்டிருக்கும் கபாலீஸ்வரக் கடவுளின் தேவியாகிய கற்பகாம்பிகை மீது இவர் பாடிய ''கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்'' என்னும் பாடல் அந்த ஆலயத்தின் வாசலில் உள்ள கருங்கல்லிலே பொறிக்கப்பட்டுள்ளதோடு பாடலின் கீழ் யாழ்ப்பாணம் இணுவில் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அக் கருங்கல்லின் எதிர்ப்புறத்தில் திருஞானசம்பந்தரின் பாடல் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

இசைத் தட்டுக்களுக்கென்று வீரமணி ஐயரால் இயற்றப்பட்ட பாடல்கள் தென்னிந்தியாவின் பிரபல பாடகர்களான சீர்காழி கோவிந்தராஜன், ரி. எம். சௌந்தரராஜன், மகாராஜபுரம் சந்தானம், பாலமுரளி கிருஷ்ணா ஆகியோரால் பாடப்பட்டுள்ளன.

**குணராஜா ஆனந்தசெந்தூரன்**

பாலமுரளிகிருஷ்ணா அவர்கள் ஒருமுறை யாழ். வந்திருந்த போது வீரமணி ஐயரின் பாடல்கள் ஆக்கும் திறமையைக் கண்டு வியந்து ''ஐயா உமக்கு நாலு சுரத்தில் இராகம் அமைத்துப் பாட முடியுமா?'' என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த வீரமணி ஐயர் தான் ஒன்றில் நான்கு சுரங்களை வைத்து ஒரு பாடலை ஆக்கிக் கொடுத்தார். இதனைக் கண்ட பாலமுரளிகிருஷ்ணா. இவருருக்கு அவ்விடத்திலேயே பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவித்தார்.

இசைத்துறையில் சிறந்த சாதனை படைத்த வீரமணி ஐயர் நடனக்கலையை தென்னிந்தியக் கலைஞர் ருக்குமணி அருண்டேலிடம் கற்றவர். இதன் மூலம் யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலை பீடத்தில் நடன, இசைப் பேராசிரியராக விளங்கும் தன்மையையும் பெற்றவர். தனக்குப் பின் பல மாணவர்களை உருவாக்கிய பெருமையும் இவருக்கு உண்டு.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் பெருமைகளைக் கண்டு பலர் பாராட்டிக் கௌரவித்த சந்தர்ப்பங்களும் உண்டு. அவர்களில் திருமுக கிருபானந்தவாரியார், சி. வா. ஜெகந்நாதன், கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, பி. ராமையாபிள்ளை, சுத்தானந்த பாரதியார், பி. ராஜிமையர், என். பாலசுப்பிரமணியம், எம்.கே. தியாகராஜ பாகவதர், மகாராஜபுரம் சந்தானம், சூலமங்கலம் சகோதரிகள், லால்குடிஜெயராமன், பித்துக்குளி முருகதாஸ், பாவநாதசிவம், ரி. ஆர். மகாலிங்கம், கொத்தமங்கலம்சுப்பு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கை அரசாங்கம் 1997 ஆம் ஆண்டு ''கலாரத்நா''. ''கலாபூஷணம்'' விருது வழங்கி வீரமணி ஐயரைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. இவற்றைத்தவிர இயல் இசை வாரதி, கவிமாமணி முதலிய பட்டங்களும் வீரமணி ஐய

(9 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி

● குண்டுகளைக் கண்டுபிடிப்பதற்காக இன்னும் அதிக அளவில் மோப்ப நாய்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்குப் படையினர் திட்டமிட்டுள்ளனர்.

★ இந்த நாய்களை அடைத்துவைக்கும் இடத்தை ''ஜன நாய் அகம்'' என்று அழைக்கலாமா?

● காணாமற் போனோரின் நலன் காக்கும் சங்கத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியிலுள்ள சிலருக்கு வேறு சில உயர் பதவிகளைக் கொடுத்து அவர்களின் கவனத்தைத் திசை திருப்பத் திரைமறைவிற் சில முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

★ காணாமற் போவோர் சம்பந்தமான சங்கமே இனிக் காணாமற் போய்விடுமோ?

● திரு. அடல்பிஹாரி வாஜ்பாய்தான் இந்தியாவின் முதலாவது பிரமச்சாரியான பிரதம மந்திரி.

★ ஒரு பிரமச்சாரி நூறு குரங்குகளுக்குச் சமம் என்பார்கள். இவர் நூறாகத் துள்ளிக் குதிப்பாரா அல்லது ஒரேயொரு அனுமானாக நின்று பணிபுரிவாரா என்பதிலேதான் இந்தியாவின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

● யாழ். பெரியாஸ்பத்திரிக்கு மருந்து பெறச்செல்லும் நோயாளிகள் இனிமேல் ''என்வலப்பும்'' கொண்டு செல்ல வேண்டும்.

★ 'முடிவை' உறவினர்களுக்கு அறிவிக்கவா? என்று பயத்துடன் கேட்கின்றார் ஒரு நோயாளி!

● இந்தியாவின் ஐக்கிய முன்னணியிலிருந்து தெலுங்கு தேசக் கட்சியும் வேறு இரு கட்சிகளிலும் விலகி விட்டன.

★ அதாவது, ஐக்கியம் பின்னணிக்குப் போய் விட்டது!

● சென்னையில் பிரபல சினிமா நடிகர்கள் பலருக்கு விசேட பாதுகாப்பு.

★ இவர்கள் நடிக்கும் கீழ்த்தரமான படங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க இதுவரை யாரும் நடவடிக்கை எடுககவில்லையே என ஏங்குகிறார் தமிழ்ப் பண்பாட்டாளர் ஒருவர்!

● இரண்டு ரூபாக் குற்றி போட்டு உபயோகிக்கும் தொலைபேசிகள் அடிக்கடி செயலிழக்கின்றன.

★ நாணயமில்லாமல் நடக்கின்றனவோ?

● சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஒரு நோயாளியிடமிருந்து ஐயாயிரம் ரூபா திருட்டப்பட்டது.

★ உள்ளே வைத்துத் தைக்கப்படக் கூடும் எனப் பயந்து, முன்னெச்சரிக்கையாக யாராவது புண்ணியவாளன் எடுத்திருப்பாரோ?

● சிங்கப்பூருக்குள் சட்ட விரோதமாக நுழைந்த பலருக்குக் கசையடியும், சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன.

★ சட்ட விரோத நுழைவை 'அடி'யோடு நிறுத்தும் முயற்சி இது!

— இடியன்

# யாழ்ப்பாணம் நீடூழி வாழ்க!

எனது சைக்கிள் யாழ்ப்பாண வீதிகளில் போய்க் கொண்டிருக்கும் போது பல சிந்தனைகள் என் மனதைக் குடைந்தன. யாழ்ப்பாணத்தில் எல்லாம் மிக மெதுவாகவே நடைபெற்றுக்கொண்டிருந்தன. நான் சைக்கிள் மிதிப்பதைவிட மெதுவாகவே மக்களின் அன்றாட அலுவல்கள் யாவும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

திடீரெனஒரு 'ஷெல்' வெடிக்கும் சத்தம் கேட்டது. பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவர்கள் திரும்பி ஓடிக்கொண்டிருந்தனர். வயதான ஆண்களும், பெண்களும் இளைஞர்கள் யுவதிகளை விட வேகமாக ஓடிக் கொண்டிருந்தனர்.

நான் இவர்களில் ஒரு குழுவினரை நோக்கி, 'என்ன நடந்தது, என்ன நடந்தது' என்று கேட்டேன். அவர்கள் எப்போதும் ''ஆமி, ஆமி'' என்று சொல்லிக்கொண்டு ஓடியவண்ணம் இருந்தனர். நான் சைக்கிளை மெதுவாக நிறுத்திப்பார்த்தேன் தாய்மார்களெல்லாம் ஒலிம்பிக்மரதன் ஓட்ட வீராங்கனைகளைப் போல் ஓடிக்கொண்டிருந்தனர். இவர்கள் எவ்வாறு இப்படிஓடப்பழக்கப் பட்டார்கள்?

ஒருநாள் ஒரு பெண்மணி தோளில் குழந்தையைச்சுமந்தவாறு ஓடிக்கொண்டிருந்தவர் குப்புற நிலத்தில் விழுந்தார். பின் எழுந்து ஓடத் தொடங்கினார்.

இவர்கள் ஏன் ஓடுகிறார்கள். 'ஆமி' வரும் போது இவர்கள் ஏன்நிற்கக் கூடாது இவை நான் சைக்களில் வரும் போது என் மனதைக் குடைந்து கொண்டிருந்த கேள்விகள்.

இளைஞர்கள் ஏ.கே.47துப்பாக்கிகளுடனும் கிரனேட்டுகளுடனும் காணப்பட்டனர். வழிய இளைஞர்கள் என்ன மாதிரி இளமையை வீணாக்குகின்றனர். இவர்கள் பாடசாலைகளிலோ பல்கலைக் கழகத்திலோ படித்துக் கொண்டிருப்பவர்கள்2

இவர்களில் இருவர் யாழ். மத்திய கல்லூரி மதிலுடன் நின்று யாழ், கோட்டை இராணுவ முகாமின் பிரதான வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இவர்கள் இராணுவம் வெளியேறுகிறதா என்று தமது சகாக்களுக்குச் சமிக்ஞை கொடுப்பதற்காக கோட்டை வாசலை மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தனர்.

*மறக்க முடியாதவர்கள்*

இந்த இரண்டு ஆண்டுகளில் நான் பல மறக்க முடியாத நபர்களைச் சந்தித்திருக்கிறேன். இவர்களில் ஒருவர் தான் தவமணி. நாங்கள் இவளை தவம் என்று அழைப்பது வழக்கம். 12 வயதான இச்சிறுமிஒரு குறும்புக்காரி.

நான் அவளுடன் எனது சொந்த ஆங்கிலத்தில் உரையாடுவேன். அவள் இப்போது சில ஆங்கில தொடர் மொழிகளில் பதிலளிக்கத் தெரிந்து வைத்திருக்கிறாள். சில வேளைகளில் அவள் ஒரு பையில் தேங்காயைக் கொண்டுபோவதையும்நான் அவதானித்திருக்கிறேன். அவளை உதவி ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டாலென்ன என்று கூட யோசிக்கிறேன்.

''சற்றடே றிவியூ'' பத்திரிகை ஆசிரியர் காமினி நவரத்தினா அண்மையில் காலமானார். இச் செய்தி கேட்டு கவலைப்படாத தமிழ்மக்கள் இருக்க முடியாது. இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்ட நெருக்கடியான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு தமிழ் மக்களின் அவலங்களை உலகறியச் செய்த இவ் களப்பத்திரிகையாளர் காமினி நவரத்தினா.

''சற்றடே றிவியூ'' பத்திரிகையின் மூலம் இலங்கை, இந்திய இராணுவங்களின் அட்டூழியங்களை உலகிற்குஅம்பலபடுத்தியவர் ''சற்றடே றிவியூ'' ஆசிரியர் காமினி நவரத்தினா.

14. 6. 86 ஆம் திகதிய ''சற்றடே றிவியூ'' பத்திரிகையில் அன்னார் எழுதிய ''யாழ்ப்பாணம்நீடூழிவாழ்க'' என்ற கட்டுரையின் தமிழாக்கத்தை அவரது நினைவாகப் பிரசுரஞ் செய்கிறோம்.

தமிழாக்கம் :ந.பரமேஸ்வரன்

மே 20-ம் திகதி அவள் என்னிடம் சொன்னாள் இன்றைக்கு ஓர் இடமும் போக வேண்டாம் என்று. ஹெலிகொப்டர்களும், விமானங்களும் குண்டுகளை வீசுகின்றன. இது கடந்த இரு நாள்களாக நடைபெற்று வந்தது. ஒரு நாள் அவள் போத்தலில் ஏதோ பானத்துடனும் நூல் ஏணியுடனும் ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டேன்.

**காமினி நவரத்னா**

சைக்கிள் கிறீச்சிட்டது, யாழ்ப்பாணத்தைப் போல, சைக்கிள் உல்லாச கார் மாதிரி மாற்றப்பட்டிருந்தது. சைக்கிள் மெக்கானிக் இப்போதும் சைக்கிளைத் திருத்திக் கொண்டிருந்தான். நான் மறுபடியும் சைக்கிளை மெது

( 9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிமாமணி, இயலிசை வாரிதி, கலாரத்நா, கலாபூஷணம்

# பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணிஐயர் அவர்களுக்கு

# "மகாவித்துவான்" பட்டமளிப்பு பெருவிழா

29 - 03 - 1998

இயலிசை வாரிதி கலாரத்நா
கலா பூஷணம்
பிரம்மஸ்ரீ
**ந. வீரமணிஐயர்**
அவர்கள்
இணுவில் வாழ் மக்கள் செய்த பெரும் தவத்தால் யாழ்ப்பாண மண்ணில் வந்துதித்தவர். அவர் வாழும் காலத்தில் நாங்களும் வாழக்கொடுத்து வைத்தமை நாங்கள் செய்த பூர்வ பாக்கியமாகும்.

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்



''மகா வித்துவான்'' பட்டம் பெறும் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் தமது இல்லத்தில் அடுக்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்கள் வரிசைக்கு முன்னால்

யாழ்ப்பாண மக்கள் செய்த தவப்பயன்
இயலிசைவாரிதி
கவிமாமணி
கலாரத்நா கலாபூஷணம்
**பிரம்மஸ்ரீ**
**ந. வீரமணிஐயர்**
அவர்களால்
**"யாழ்ப்பாணம்"**
எனும் பெயர்
தமிழ் கூறும் நல்லுலகமெங்கணும் மேன்மையடைவதாயிற்று. இந்த மேன்மை கலைத்துறையைப் பொறுத்த அளவில், தவில் மேதை லயஞானகுபேரபூபதி
**விசுவலிங்கம்**
- தெட்சணாமூர்த்திப்பிள்ளை
இசைப்புலவர்
என். சண்முகரத்தினம்
உள்ளிட்ட பலரால் தமிழகத்திலும் தமிழ் கூறும் நல்லுலகமெங்கணும் நிலை நாட்டப்பட்டமை வரலாறாகி விட்டது. இதுயாழ்ப்பாண மக்கள் செய்த தவப்பயனே எனலாம்.

– செல்லப்பா நடராசா

யாழ்ப்பாணம் இணுவில்
கவிமாமணி இயலிசை வாரிதி கலாரத்நா கலாபூஷணம்
**பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்** அவர்களது
கலைச்சேவையினைப் பாராட்டி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமும், இணுவில் வாழ் சைவப் பெருமக்களும், யாழ். மாவட்ட ஆலய பரிபாலன சபையினரும், கலைஞர்களும், நண்பர்களும், பத்திரிகையாளர்களும், கலைத்துறையாளர்களும், கலாசாலைகளைச் சேர்ந்தவர்களும், இசைப்பிரியர்களும், ஒன்றுசேர்ந்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்
**பொ. பாலசுந்தரம்பிள்ளை** அவர்களது தலைமையில்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்
## இன்று 29 - 03 - 1998 ஞாயிறு

எடுக்கும் **பெருவிழாவில்**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமுதல்வர் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் அவர்களுடன் சேர்ந்து நாங்களும் அன்னவரை வாழ்க வாழ்க வாழ்க என வாழ்த்துகிறோம்.

அத்துடன் அமையாது —
72 மேளகர்த்தா இராகங்களையும் உருப்படி செய்து சுரப்படுத்தி 108 தாளத்தில் பரிபூரணமாக நிறைவாக மங்களகரமாக இசைப்பிரியர்களின் மனம் குளிரும்படியாக சாஸ்திரிய சங்கீதம் என்றென்றும் நிலைத்திருக்கும் வண்ணம் அதன் ஆக்கத்திற்கும் மேன்மைக்குமாக அமைத்திருக்கிறார்கள். தங்கள் ஆக்கங்கள் மும்மூர்த்திகளின் படைப்புக்களைப் போல சங்கீத உலகிற்கு பயன்படும்வகையில் ஆக்கபூர்வமாக வெளிவர வேண்டும் என எல்லாம்வல்ல மயிலாப்பூர் கற்பகாம்பாளை இறைஞ்சி வணங்கி அன்னையினது பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றி வாழ்த்தி ஆசி கூறுகிறோம்.

வாழ்க பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்
வாழ்க அவரது சேவைகள்
வாழ்க அவரது சாகித்தியங்கள்
வளர்க அவரது கோயில் ஆக்கங்கள்
வளர்க அவரது இசைத் தொண்டு
வளர்க அவரது நாட்டிய நாடகங்கள்
மேன்மையுறுக அவரது தமிழ் அபிமானம்
வாழ்க வாழ்க வாழ்க என வாழ்த்தும் பெரும் பேறுபெற்ற

## லிங்கம் குளிர்பான தாபனத்தார்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[விளம்பர இல சி-3203]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக 2 ஆம் வருட (A பிரிவு) கலைப்பீட மாணவர்களால் 30 — 03 — 98 அன்று செல்வதாக இருந்த சுற்றுலா 31 — 03 — 98 செவ்வாய்க்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஏற்பாட்டுக்குழு.

(54391)

## குளிர்பானப் பிரியர்களுக்கொரு நற்செய்தி

பிரதான வீதி, நெல்லியடியில்

## லவ்லி கூல்பார்

என்னும் குளிர்பான சாலை

**30 - 03 - 98** திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. குளிர்பானப் பிரியர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் வருக வருக என அழைக்கின்றோம்.

ரவி, பாலன், நண்பர்கள்.

சுபாஸ் பேக்கரி,
நெல்லியடி,
கரவெட்டி.

(சி-3224)

## அறிவித்தல்

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒத்திவைப்பு**

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை நலன்புரிச்சங்கத்தின் நண்பர்களுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் திட்டமிட்டபடி **29 - 03 - 98** இன்று இடம்பெறமாட்டாது. அச் சீட்டிழுப்பு எதிர்வரும் **98 - 05 - 10** ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு இடம்பெறும் என்பதனை அறியத் தருகின்றேன்.

தலைவர்,
நலன்புரிச்சங்கம்,
நாகேஸ்வரி வித்தியாசாலை.

[54378]

## வாழ்த்துகின்றோம்

எமது சங்கத்தின் உபதலைவரான
**உயர்திரு. சின்னத்தம்பி செல்லத்துரை**
அவர்கள்
நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நிர்வாக குழு அங்கத்தவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

[54361]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## மயில்வாகனம் இராசேந்திரா

தோற்றம்: **02—10—1936**
மறைவு: **27—02—1998**

துணையாக நின்று துணிவுதந்து வழிகாட்டி நினையாத வேளையில் நீங்கள் பிரிந்திடினும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சந்தை வீதி,
ஆவரங்கால்.

(54358)

## தவணைப் பரீட்சை

யாழ். குடாநாட்டின் சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் இம் மாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை வரை முதலாம் தவணைப்பரீட்சை நடைபெறும் எனக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-30)

## வாகனவரி செலுத்துக!

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மோட்டார் வாகன உரிமையாளர்கள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் 98 ஆம் ஆண்டுக்கான வாகன வரியைச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

## தேவை

றேடியோ, கசட் செற்கள், அம்போன்றவற்றை உத்தரவாதத்துடன் பழுது பார்க்கக் கூடியவர்கள் தேவை.

(அரைகுறை வேலை தெரிந்தவர்கள் தேவையில்லை)

தொடர்பு:
**வீனஸ் - டில்கா**
284, ஸ்ரான்லி வீதி,
(நாக விகாரை முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி-3240)

## வடமராட்சி கிழக்கில் நுளம்பு ஒழிப்புப் பணி

செம்பியன்பற்று, மார்ச் 29

வடமராட்சி கிழக்குப்பகுதியில் பருத்தித்துறை சுகாதார அதிகாரி பணிமனையினரால் குளங்கள் துரவுகள் என்பனவற்றிற்கு ''அபேற்'' என்னும் நுளம்புகளை ஒழிக்கும் மருந்து விசிறப்பட்டு வருகிறது.

4 விசேட பிரிவினர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மணற்காட்டில் இருந்து மாமுனை வரை இம்மருந்து விசிறும்பணி நடைபெறுகிறது.

மருந்து விசிறிய உடனேயே குளங்களையும் துரவுகளையும் மக்கள் பாவிக்க முடியும் என்று பருத்தித்துறை சுகாதார அதிகாரி பணிமனை வெளிக்கள உத்தியோகத்தர் வ. வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

(ஐ-36)

## கண்ணீர் அஞ்சலி

யா/செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை ஆசிரியரும், செம்பியன்பற்று தெற்கு சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளரும் செம்பியன்பற்று தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க கணக்காய்வாளரும் ஆகிய

## நடராசா அம்பிகைபாகன்


அவர்களின் திடீர் மறைவு குறித்து சொல்லொணாத் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை எமது கண்ணீர் அஞ்சலியால் காணிக்கையாக்குகிறோம்.

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்,
செம்பியன்பற்று தெற்கு.

கிராம அபிவிருத்திச்சங்கம்,
செம்பியன்பற்று தெற்கு.

(54372)

உ
அம்பாள் துணை



நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

### திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்திவிழா

# மஹாகும்பாபிஷேகம்

### 01-04-1998

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு [தைலாப்பியங்கம்]சாத்தல்: 30-03-98 திங்கள் பிற்பகல் 2.15 மணி தொடக்கம் 31-03-98 மாலை 5.00 மணிவரை,

மஹா கும்பாபிஷேகம்: 01-04-1998 [பங்குனி 18 ஆம்திகதி] புதன்கிழமை காலை 9.24 முதல் 10.12 வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறும்.

மண்டலாபிஷேகம்: மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும்.

மண்டலாபிஷேகம் செய்யவிரும்புபவர்கள், மேற்படி, கோயில் அறங்காவலர்சபையுடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்யவும். முன்பதிவு அடிப்படையில் அபிஷேகங்கள் வழங்கப்படும்.

அடியார்கள் அனைவரும் வருகைதந்து அம்பிகையின் மஹா கும்பாபிஷேகத்தைக் கண்குளிரக் கண்டுகளித்து அன்னையின் திருவருளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

குறிப்பு: வருகைதரும் அடியார்கள் கூடுதலான பொதிகளை தம்முடன் எடுத்துவருதலைத் தவிர்த்துக் கொள்வது, பிரயாணத்தினை இலகுவாக மேற்கொள்ளுவதற்கு உதவியாக இருக்கும்.

நயினாதீவு.

(54144)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், ரியூட்டரி கொட்டகை, வீட்டுப் பாவனைப் பொருள்கள், தையல் மெஷின், எவர்சில்வர் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. அம்பிகைபாகன், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [54383]

மணித்தாரா குஞ்சுகளும், பெரிய தாராக்களும் (கறுப்பு, வெள்ளை) விறைத்து கோழிக் குஞ்சுகளும் மலிவு விலையில் உண்டு. தொடர்பு: 9பிளைச்சர் ஒழுங்கை. (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்) சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [54237]

நல்ல நிலையிலுள்ள ஜப்பானிய தயாரிப்பான ஜென்மார் டீசல் ஜெனரேற்றர் (200K.W.) விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. சிவகுமார், இல. 15, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். [54339]

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட தரமான நஷனல் டெக்மொடல் G-15, 3-70, 7-500 விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. விஜயஜீவன், மல்வம் குறுக்குத்தெரு, 8ஆம் கிளை சங்கத்தடி, உடுவில். [54368]

பிறிமா, கைலைன் பிறவுண் ஒருநாள் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும். [சி/3221]

பலஇன கலர் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- A. அருளானந்தம் (குட்டி), 58/8, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (நண்பகல் 12 மணியிலிருந்து பார்வையிடலாம்) (54390)

அல்சேசன் (கறுப்பு) நாய்க்குட்டிகள் (45 நாள்கள்) நிரம்பியது விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (54388)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல: 40, கோயில்வீதி யாழ்ப்பாணம். (54389)

## தவறிவிட்டது

துங்கராசா இ ஞ்சிதமலர் என்பவரது 687913230V இலக்க தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன பலாலி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 21. பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியில் ஒப்படைக்கவும். (54387)

## பேட்டுக்குஞ்சுகள்

ஒருமாதம் வளர்ச்சியடைந்த பிறிமா, கைலைன் பிறவுண், பிறிமா கைலன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்லிகாபதி சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். (54393)

## விற்பனைக்கு

டீசல் (ELF) 350 இன்ஜின் முழுமையாகவும், பகுதியாகவும் LD 2 இன்ஜின் ஒன்றும், BMC 22 SRI, 24 SRI இன்ஜின்களும் விற்பனைக்குண்டு. சனிக்கிழமை பார்வையிடலாம்.

**அண்ணா தொழிலகம், இணுவில்.**

(54344)

## SPOKEN ENGLISH

எழுத வாசிக்கத் தெரிந்தும் கதைக்க சிரமப்படுவோருக்கான, வேலை பார்ப்போருக்கான ஆங்கில வகுப்புகள் ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [54369]

## வாங்கப்படும்

Sony (20 20). (2032) (2030) போன்ற நல்ல ரி.வி. (TV)கள் சொந்தப் பாவிப்பில் இருப்பதென்ற அத்தாட்சியுடன் விற்க விரும்பினால் வாங்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக பழுதடைந்த ரி.விக்கள் வாங்கப்படும். தொடர்பு: வீனஸ் தனபாலசிங்கம், B. Sc. Dip. Cey. in Electronic Engineering, London. (நாக விகாரை முன்பாக). [சி/3223]

## புறொயிலர் குஞ்சு

பிறிமா புறொயிலர் ஒருநாள் குஞ்சு 1-4-98 புதன் காலை விற்பனை செய்யப்படும். தேவையானோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். தொடர்பு: 'மல்லிகாபதி' சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். [54394]

## வீடு விற்பனைக்கு

5 பரப்புக் காணியுடன கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு சம்பியன் ஒழுங்கை, கொக்குவிலில் விற்பனைக்குண்டு (யாழ். பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரிக்கு 1/2 மைல் தூரத்தில்) தொடர்பு: இல:- 721 C/O உதயன், யாழ்ப்பாணம். (54342)


## திருமண சேவை

எங்களிடம் லண்டனில் வசிப்பிடமாக இருக்கும் கௌரவமான குடும்பத்தில் உள்ள சித்திரை நட்சத்திரமுடைய 68 ஆம் ஆண்டும், 72 ஆம் ஆண்டு எக்கவுண்டன் ஆகக் கடமைபுரியும் பெண்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [54374]

## திருத்த வேண்டுமா?

ரி. வி. றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B.Sc. Ceylon, Dip. In Electronic Engineering London), 284, ஸ்ரான்லிவீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3069]

# என்றும் தணியாத சோக அலைகள்
# 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்

**திருநாவுக்கரசு தருமலிங்கம்**

[அகில இலங்கை சமாதான நீதிவான்]

மலர்வு: 01 - 06 - 1940 உதிர்வு: 03 - 10 - 1997

திதி: 29 - 03 - 1998

தமையனாய், தாரமாய், தந்தையாய் இருந்து
எமைத் தரணியிலே வளர்த்தெடுத்தீரே!
தனியாக எமை விட்டுப்போக எப்படி
அப்பா உங்களுக்கு மனம் வந்தது?
தணியாத சோகம் ஒன்று நித்தமும்
எமை இங்கு வாட்டுதே
உங்கள் நிழல் படாத வீடிங்கே
பாலைவனம் ஆகிவிட்டது!
உங்கள் திருமுகம் காணாது அன்பு வார்த்தை
கேட்காது ஆறு மாதங்கள் ஓடிவிட்டன
ஆறு மாதங்கள் சென்றாலென்ன
ஆறு யுகங்கள் சென்றாலென்ன
என்றும் எங்கள் இதயத்தில்
வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள்.

அன்பு மனைவி, அன்புச் செல்வங்கள்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனி,
மருமக்கள், பெறாமக்கள்.

178/1, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். [54383]

# கவிமாமணிக்கு எம் கவிப்பாராட்டு


கற்பக வல்லிக் கவிதையி லேயருள் கண்டதனாற்
பொற்பதம் வேண்டிப் பொழிந்த சுவைஞனே
அன்னவளின்
நற்கதி கேட்டிட நல்சின ளேயருள் நாம்வியந்தோம்
அற்புத வீர மணியைய வாணி அருளுவளே.

நாட்டிய நாடகம் கர்நாடகவிசை நற்கவித்வம்
மேட்டு மலையுச்சி ஊற்றாய் அமைந்த கவிமணிபா
ராட்டைப் பெறுவது கேட்டுளம் பூரித்தே
ஆர்ப்பரித்தோர்
கோட்டுக் கணபதி யின்னருள் கூடக்கை கூப்புவமே.

**வடமராட்சிக் கிளைக் கம்பன் கழகம்.**

(சி-3226)

# ஓர் ஆண்டு நினைவஞ்சலி



**அருட்திரு. எஸ். எச். ஜெபநேசன்**

மறைந்த முன்னாள் மனித முன்னேற்ற நிலைய இயக்குநர் அருட்திரு. எஸ். எச். ஜெபநேசன் அடிகளாரின் ஓர் ஆண்டு நிறைவையொட்டி யாழ். பேராலயத்தில் 30 - 03 - 98 திங்கட்கிழமை காலை 8 - 30 மணிக்கு குருமுதல்வர் அருட்திரு. ஜே. பி. செல்வராசா அடிகளார் அவர்களால் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில்பங்குபற்றிஅன்னாரின்ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர், ஊழியர்கள்,
யாழ். மறைமாவட்ட
மனித முன்னேற்ற நடுநிலையம்
யாழ்ப்பாணம்.

(54292)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



மானிப்பாய்

**சுப்பையா செல்வநாயகம்**

சிறாப்பர்

(திறைசேரி, சுங்கப்பகுதி, புகையிரதப்பகுதி, யாழ். கச்சேரி)

தோற்றம்: 02 - 12 - 1916 மறைவு: 27 - 02 - 1998

பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து
எமை நல்வழிப்படுத்தி எமக்கு ஆதரவு நல்கி
வாழ வைத்த அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாடும்:
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''கௌரி மஹால்'',
மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

(54386)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முறைப்பாடும் நிலைப்பாடும்

இலங்கையின்சகல பகுதிகளிலும் தமிழர்கள் சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கப்பட்டு, கண்டகண்ட மாதிரி, கேள்வி விசாரணை எதுவுமின்றிக் கைது செய்யப்படும் அரச அடாவடித்தனம் குறித்து இப்பத்தியில் அடிக்கடி எழுதி வருகிறோம்.

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அரசுத் தலைவர்களைச் சந்தித்து இந்த அநியாயம் குறித்து முறைப்பாடு செய்கிறார்கள்.

ஆனால் தமிழர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களும், கொடுக்கப்படும் தொல்லைகளும் இன்னும் நீக்கப்படவில்லை; குறைக்கப்பட்டதாகவும் இல்லை. பதிலுக்கு பாதுகாப்புக் கருதிய தேடுதல்கள், சுற்றிவளைப்புகள், கைதுகள், படமெடுத்தல்கள் மேலும் தீவிரமும் உத்வேகமும் அடைந்து வருகின்றன.

தேவையில்லாமல் அப்பாவித் தமிழ் மக்கள்தொல்லைக்கு ஆளாக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு இந்த நாட்டின் அரசுத் தலைவர்களுக்கு மக்கள் சார்பில் சங்கங்களும் அமைப்புகளும் விடுத்த வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆயிற்று.

இதனைப் புரிந்து கொண்டு, வெள்ளம் கழுத்தளவுக்கு வந்த நிலையில், அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் இந்த அநியாயத்தைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரிடம் நேரில் சென்று முறையிட்டுள்ளனர்; இந்திய அரசின் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

தமிழ் மக்களின் மனித உரிமைகளை, நிம்மதியாக வாழ்வதற்கான உரிமைகளைப் பறிக்க வேண்டாமென்று இலங்கைஅரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டுள்ளது என்றே இந்த முறைப்பாட்டைக் கருத வேண்டும்.

உள்நாட்டு விவகாரம் ஒன்றில் வெளிநாடு எந்தளவுக்கு தலையிடும், அழுத்தம் கொடுக்கும் என்பது கேள்விக்குரிய ஒன்றாகும். இலங்கையின் மிகப் பிரதான விடயமான இனப் பிரச்சினையில் அயல்நாடான இந்தியா கடைப்பிடித்துவரும் அணுகுமுறை "அங்கு எதுவும் நடந்து விட்டுப் போகட்டுமேன்; எங்களுக்கென்ன?" என்பதாகவே உள்ளது.

ஆகையால் முற்று முழுதான உள்வீட்டு நடவடிக்கை ஒன்று தொடர்பாக இந்தியா தனது அழுத்தத்தைப் போடும் என்று நம்புவதற்கில்லை. அதேவேளை இத்தகையமுறைப்பாட்டினால்தனக்கு அழுத்தம் வரும் என்று அஞ்சும் நிலையில் இலங்கை அரசும் இல்லை.

இந்திய அரசு ஈழத் தமிழர்கள் தமது சொந்த நாட்டிலேயே கண்டபடி கைது செய்யப்படுவதையும், இம்சை செய்யப்படுவதையும் தடுப்பதற்கு உதவுமானால் அது பெரிய கொள்கை மாற்றமாகவே அமையும்.

தமிழர்கள் இலங்கை அரசினால் வெளியாராகக் கருதப்படும் வரை அவர்களின் இடர்கள் நீங்குவதில் எந்த வகை முன்னேற்றமும் உண்டாகாது.

# மற்றவர்களை மன்னிப்பதின் மூலமே மனிதர்கள் புனிதமடைகின்றார்கள்

அன்பு எனும் அத்திவாரத்தில் மன்னிப்பினால் கட்டி எழுப்பப்படுவதுதான் கிறிஸ்தவமாகும். இவ்வுலகில் பிறர் எமக்கிழைக்கும் குற்றங்களை நாம் மனதார மன்னிக்கும்போது இறைவனும் தெரிந்தும் தெரியாமலும் நாம் இழைக்கும் குற்றங்களை மன்னிக்கின்றார். மன்னிப்பதும், மன்னிக்கப்படுவதும் எமது வாழ்வின் முக்கியமான தேவையான நிகழ்வுகளாகும்.

சிலசமயங்களில் மன்னிப்பது என்பது மனிதசக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம். ஆனால் மன்னிப்பதன் முக்கியத்துவம் பற்றி நற்செய்தியில் பல இடங்களில் வலியுறுத்திக் காட்டப்பட்டுள்ளது. எத்தனை முறை ஒருவரை மன்னிக்கலாம் எனக் கிறிஸ்துவிடம் வினவியபோது 'ஏழு முறையல்ல எழுபதுஏழு முறையும் மன்னிக்கலாம் எனக் கூறுகின்றார்' (மத். 21-22) தன் ஊழியனிடம் கணக்குக் கேட்ட அரசன் உவமையைக் கூறும் கிறிஸ்து ஊழியனின் பெருங்கடனை அரசன் மன்னித்து அனுப்பும்போது ஊழியன் தன்னிடம் சிறு தொகை கடன்பட்டவனை மன்னியாது தண்டனைக்குட்படுத்துவதை எடுத்துக் கூறி அச்செயலை வன்மையாகக் கண்டிக்கின்றார் "தன் ஒவ்வொரு சகோதரனையும் முழு உள்ளத்தோடு மன்னிக்காவிடின் என்வானகத் தந்தையும் இவ்வாறே செய்வார்" (மத் – 23 35) என்கிறார்.

## ஞாயிறு நற்பிரசாதம்

சாதாரணமாக இன்று நாம் காண்பதும் சந்திப்பதும் எவை? பலரது வாழ்வின் பெரும்பகுதி மற்றவர்களின் குறை குற்றங்களை, பலவீனங்கள் பற்றி அலசி ஆராய்வதிலும், பேசுவதிலும், பழிக்குப் பழி வாங்குவதிலும் கழிந்து விடுகின்றது. ஒருவன் மனித பலவீனத்தால் குற்றம் புரியும்போது அதை மன்னியாது பெரிதுபடுத்துவதும் பலவீனமாகும். இரண்டு செயல்களும் சமமானவையே.

ஒரு சந்தர்ப்பத்தில்இயேசு கூறுகின்றார் "நீஉனது கண்ணில் உள்ள மரக்கட்டையைப் பார்க்காமல் உன் சகோதரன் கண்ணில் உள்ள துரும்பைப் பற்றி அச்சுறை கொண்டு அதை எடுக்க முனைவது எங்ஙனம்?'' எங்களில் பலர் தமது குற்றங்களைப் பற்றிச் சிந்தியாது அயலவரின் குற்றங்களை எடுத்து நோக்கிப் பெரிதுபடுத்துவதுடன் மன்னியாது விடுவதனால் எத்தனை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன? கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்றுதான் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

எனது கை என் கண்ணில் குத்திக் காயம் ஏற்படுத்தினால் அதை உடன் வெட்டி எறிகின்றேனா? தெரியாமல் பட்டது என மன்னிக்கின்றேன். அவ்வாறாயின்கிறிஸ்து எனும் மறைஉடலின் அங்கங்களாகிய நாம் எம் அயலவரை மன்னிக்கத் தயங்குவது ஏன்? நானும் நல்லவன், அவனும் நல்லவன்; நானும் குற்றம் இழைப்பவன், அவனும் குற்றம் இழைப்பவன் என்று குற்றத்தை ஏற்கும் மனநிலை எங்களுக்கு இருக்க வேண்டும்.

தன் இறுதி மரணவேளையிலும் "பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்'' எனக் கூறி உயிர் விட்டார் இயேசு.

மன்னிப்பதன் அவசியத்தை இங்கே ஆணித்தரமாகக் காட்டியுள்ளார். இதை நாம் பின்பற்றாவிடின் கிறிஸ்துவின் சாட்சிகள் எனக் கூறிக் கொள்வதில் அர்த்தமே இல்லை. எனவே நாம் வாழ்வின் எந்த நிலையில் இருந்தாலும் ஒருவர் ஒருவரை மன்னித்து வாழ வேண்டும். ஒரு தனிநபர் இழைத்த குற்றத்திற்காக முழுக்குடும்பத்தையும் பழி வாங்குவதனையும் ஒரு சிலர் செய்த தவறுக்காக முழுச்சமுதாயத்தையும் தண்டிப்பதும் நாம் இன்று நிதர்சனமாகக் கண்டு வருகின்றோம். எனவே நாம் மன்னித்து நாமும் மன்னிப்புப்பெற இறைவன் எங்களை அழைப்பதை உணர்ந்து வாழ்வோம்.

**தவகால சிந்தனை**
**33 ஆம் நாள்**

*திருமதி*
*பி.எவ்.சின்னத்துரை*

# விவசாயிகள் ஓய்வூதியத்தில் சேர 50 வயதுக்கு மேல் அனுமதியில்லை

வலி.தென்மேற்கு,மார்ச்29

கமச்காரர் ஓய்வூதியத்திட்டத்தில் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களைஇணைத்துக் கொள்ள முடியாது என யாழ், மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் சுற்றறிக்கை மூலம் சகல கமநல கேந்திர நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது.

இத் திட்டம் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இத் திட்டத்தினால் யாழ். மாவட்டத்தில் அண்மையில் சேர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்த விவசாயிகளின் 50 வயதுக்கு மேற்பட்ட பெரும்பாலானோர் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இனிவரும் காலங்களில் 18 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவர்களே விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பதினெட்டு வயதில் 8 விவசாயம் செய்யும் ஒருவர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்தால் அவர் 4 ஆயிரத்து 167 ரூபாவை ஓய்வூதியமாகப் பெறுவார். 50 ஆவது வயதில் ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் ஒருவர் தனது 60 ஆவது வயதில் ஆயிரத்து 84 ரூபாவை ஓய்வூதியமாகப் பெறுவார்.

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் அதிகரித்தநலன்களினால் பெரும்பாலான விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்கின்றனர்.

(ஐ.185)

# வீதியில் யுவதி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

மினிபஸ்ஸில் இருந்து இறங்கி வீதியின் குறுக்காக செல்ல முயன்ற வேளை மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி முன்பாக கடந்த புதனன்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் கொடிகாமம் வடக்கைச் சேர்ந்த சிவராசா விஜிதா (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஐ-15-31-117)

## யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

### வைத்தீஸ்வரா வாழி! வாழி!

தேனகமா மலர்க்கொன்றைத் தேவே வாழி
தெவிட்டாத பேரின்பத் தெளிவே வாழி
ஊனகமாய் உலவுமுயிர்க் குயிரே வாழி
உயர்ந்தமறைக் கெட்டாத உயர்வே வாழி
தானகமாந் தத்துவத்தின் தளிர்ப்பே வாழி
தவமுயல்வார் தங்கருத்தின் தவமே வாழி
வானகமாய் வையகமாய் மலர்வாய் வாழி
வண்ணைவைத் தீஸ்வரா வாழி! வாழி!

*ச. தங்கமாமயிலோன்*

(இன்று ஞாயிற்றுக்கிழமை – ஏழாம் திருவிழா)

### மருதடிப் பிள்ளையாரே!

அரசுவேம் பத்தி இத்தி ஆலுடன் மாவின் கீழும்
தெருகுளம் ஆற்றின் ஓரம் திருவுடன் கோவில் கொண்டு
பரவிடும் அடியார்க் கென்றும் பரிந்தருள் செய்தே யெங்கள்
மருதடித் தலத்து வாழும் மாகண பதியே போற்றி

தடையினால் அடியோம் நாங்கள் தாங்கிடுந் துயரம் போமோ?
விடையினைக் காணா தென்றும் விசனத்தோ டேங்குகின்றோம்
மடைதிறந் தருளைப் பாய்ச்சும் மருதடிப் பிள்ளையாரே
கொடியுயர்ந் தேறும் நாளெம் குறைகளைத் தீர்ப்பாய் போற்றி.

*- சிற்பி*

சரித்திரப் [illegible] பெற்ற [illegible] மருதடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகிறது.

# பல்கலைக்கழகங்களின் 'மினிஒலிம்பிக்'

வலி தென்மேற்கு, மார்ச் 29

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான 'மினிஒலிம்பிக்' விளையாட்டுப் போட்டியை இவ் வருடம் றுகுணு பல்கலைக்கழகத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் மினிஒலிம்பிக்போட்டியில் ஒன்பதுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் பற்றவுள்ளன.

ஐந்தாவது மினிஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி 1995 ஆம் ஆண்டில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது தெரிந்ததே.

இவ்வருடம் றுகுணு பல்கலைக்கழக தேசிய விளையாட்டில் பங்குபற்ற அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தமது வீரர்களை தெரிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

(ஐ-185)

**உதய வாக்கு**

அன்பர் பணி செய்யவென ஆளாக்கிவிட்டு விட்டால்:
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே.

*- தாயுமானவர்*

## நாளை

பங்குனி 16
திங்கட்கிழமை
திதி: திருதியை
பின்இரவு: 2.22 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
முற்பகல்: 11.24 வரை.
சௌபாக்கிய கௌரி விரதம்
சுபநேரம்: 12.13 1.43
ராகு காலம்: 7.43 9 13
(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## குருபூசை

கொழும்புத்துறை, மார்ச் 29

செல்லப்பா சுவாமிகள் குருபூசை நாளை திங்கட்கிழமை காலை நல்லூர் தேரடிக்கு முன்பாக உள்ள குருபூசை மண்டபத்தில் நடைபெறும். நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது தர்மகர்த்தாசபையின் நீண்டகால உறுப்பினராகச் சேவைபுரிந்து 27 - 02 -98 அன்று இறைபதம் அடைந்த

அமரர்

**சுப்பையா செல்வநாயகம்**

அவர்களின் சேவைகளைப் பாராட்டி நினைவுகூரும் அதேவேளையில் எமது இதயபூர்வமான அஞ்சலிகளைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் திருவருளை வேண்டுகிறோம்.

தர்மகர்த்தா சபை

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி
அம்மன் ஆலயம்,
சுதுமலை, மானிப்பாய். (50009)

## யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம்

நடத்தும்

30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட
விலகல் முறையிலான

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

ஏப்ரல் 4, 5 ஆம் திகதிகளில் நடைபெறும்.

விண்ணப்பமுடிவு - 29 - 03 - 1998

அணி ஒழுங்கு தெரிவு - 30 - 03 - 1998
பி. ப. 3. 30 மணி

யாழ். மத்திய கல்லூரியில்
நடைபெறும்.

பிரவேசக் கட்டணம் ரூபா - 200

பங்குபெறும் கழகங்கள் ஒரு பிரதிநிதியை அனுப்பவும்.

T. ஜெகநாதன்
செயலாளர்,
யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம்.

(சி/3245)

உ

## உபநயன பிரம்மோபதேச
## சுபமுகூர்த்த அழைப்பு

நிகழும் ஈசுர வருடம் பங்குனி மாதம் 16 ஆம் நாள் [ 30 - 03 - 98 ] திங்கட்கிழமை சித்தயோகமும் வளர்திருதியையும், அஸ்வினி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் முற்பகல் 9. 15 மணிமுதல் 10. 30 மணி வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

''அகிலஇலங்கை இந்துமத குருபீடாதிபதி''
''சிவாகமஞானி'' ''வைத்திய கலாநிதி'' சிவப்பிரம்மஸ்ரீ
ஸ்கந்த - சாம்பசிவ சிவாச்சார்யார்
அவர்களினதும்
சங்கானை இலுப்பத்தாழ் முருகமூர்த்தி தேவஸ்தானம்
கூடத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தான
ஆதீனகுரு சிவப்பிரம்ம ஸ்ரீ
சுந்தர - சிவானந்தக்குருக்கள்
அவர்களினதும் பௌத்திரரும்

எமது கனிஷ்ட குமாரர்களுமாகிய

**சிரஞ்சீவி சுதானந்த சர்மா**
**சிரஞ்சீவி ஜெகானந்த சர்மா**

இருவருக்கும் உபநயன பிரம்மோபதேசம் செய்வதற்கு திருவருளும், குருவருளும் கைகூடி உள்ளதால் ஷெ முகூர்த்தம் எமது இல்லமாகிய 'சிவானந்த பவனத்தில்' நடைபெறுவதால் அத்தருணம் தங்களும் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வருகை தந்து சுபமுகூர்த்தத்தை சிறப்பித்து எமது குமாரர்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்மோபதேச குரு:

நயினை நாகபூஷணி அம்பாள் ஆதீனகுரு
சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆதீன குரு
கிரியா முக்தாமணி 'சிவப்பிரம்ம ஸ்ரீ'
ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சார்யார்
அவர்கள்.

தங்கள் நல்வரவை நாடும்:
சிவப்பிரம்மஸ்ரீ
சிவா. நித்தியானந்தக் குருக்களும்,
பாரியாரும், பிள்ளைகளும்.

'சிவானந்த பவனம்'
முருகமூர்த்தி கோயில் வீதி,
சங்கானை. [54392]

## இன்றும் நிவாரண விநியோகம்

அரியாலை, மார்ச் 29

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள யாழ். பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கிளைகள் யாவும் விடுமுறைநாளான இன்று ஞாயிற்றுக்கிழமை முழு அளவில் திறந்திருக்கும் என்று சங்கத்தின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்தோருக்கான அறுபதாவது ''ஏ'' ''பீ'' உலர் உணவு முத்திரைப் புள்ளிகளுக்கு நிவாரணத்தை வழங்கும் முகமாகவே இப்பகுதி கிளைகள் திறந்திருக்கும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் இந்த நிவாரணப் புள்ளிகளுக்கு பொருள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இத் திகதிக்கு பின்னர் நிவாரணம் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

## பிரவச விருதி அமைப்பு

செம்பியன்பற்று, மார்ச் 29

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவிவரும் பிரசவ விடுதி இல்லாக் குறையை நீக்கும் பொருட்டு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் பிரசவவிடுதியை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபைத்தலைவர் பொ. சங்கரப்பிள்ளை தெரிவித்தார். (ஐ-36)

## வன்னியசிங்கம் படிப்பகம் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

கல்வியங்காடு பொதுச் சந்தைக்கு அருகே அமைந்துள்ள வன்னியசிங்கம் படிப்பகம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

நீண்டகாலமாகச் செயற்படாமல் பொலிவிழந்து காணப்படும் இந்தப் படிப்பகத்தை மீள புனரமைத்து இயங்கச் செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தப் படிப்பகத்தை ''வன்னியசிங்கம் பொதுப் பணி மன்றம்'' என்னும் பெயருடன் புனரமைத்து இயங்கச் செய்வது என அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இடைக்கால நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது. (ஐ)

## தேவை

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள புத்தக நிலையத்தை நிர்வகித்து நடத்தக் கூடிய பெண் பிள்ளை தேவை.

(50008)

## சிங்கள வகுப்புக்கள்

எழுத, பேச, வாசிக்க

ஆரம்பம்: 04 - 04 - 98

(இணுவில் கிழக்கு, சிவன் கோயிலுக்கு அண்மையில்)

ஆசிரியர்:
திருமதி தேவராஜா
(யாழ். மாவட்ட நீதி மன்ற மொழிபெயர்ப்பாளர்)

(சி-3232)

## நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவி

**திருமதி இந்திரா மகாதேவா**

காலமானதையிட்டு நேரடியாகவும், கடித மூலமும் அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் சாத்தியவர்களுக்கும் மற்றும் அவர் சுகவீனமுற்று இருந்த போது வைத்தியம் செய்த வைத்தியர்கள், தாதியர் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் ஏனைய உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ. மகாதேவா குடும்பத்தினர்
(மகாதேவா ஜோதிடம்)

140, செல்லர் வீதி,
நல்லூர். (சி-3242)

## கண்ணீர் அஞ்சலி

செம்பியன்பற்றைச் சேர்ந்த எமது சக ஆசிரியையான திருமதி அ. வளர்மதி அவர்களின் அன்புக் கணவர்

**அம்பிகைபாகன்**

25. 03. 98 அன்று இறைபதம் அடைந்த செய்தியைக் கேள்வியுற்று அதிர்ச்சியுற்றோம். ஆசிரியைக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணைப்பாளர்,
வள ஆளணியினர்கள்,
பணி முன் பயிற்சி ஆசிரியர்கள்,
வட இந்து மகளிர் கல்லூரி,
யாழ். வலயம்- 2.

(சி/ 3282)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஆண்டவன் படைப்பு: 02 — 02 — 1921



ஆண்டவன் அழைப்பு: 27 — 02 — 1998

திருமதி

**இராசமணி கனகரத்தினம்**

''ஒரு திங்கள் உருண்டாலும் - தாயே உங்கள்
திருவுருவம் கொலுவீற்றிருக்குதம்மா!
இருவிழியில் நீரோட விம்முகின்றோம் - நிமலன்
பெருவாழ்வு காண நாம் பூஜிக்கின்றோம்.''

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்துடன் இன்று (29 - 03 - 1998) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்திய வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் வேண்டுகின்றோம்.

துணைவர்: சி. வ. சி. கனகரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மக்கள்: ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி, இராஜேஸ்வரன் (கனடா), கனகேஸ்வரன் (ஆசிரியர், வவுனியா), இரத்னேஸ்வரன் (சுவிஸ்), யோகேஸ்வரி (கனடா).

மருமக்கள்: மதிவதனி, பத்மநாதன் (காணிப் பதிவகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), அருந்ததி, சரோஜினிதேவி, ஜம்புகேஸ்வரி, பிரேம்குமார்.

பேரப்பிள்ளைகள்: பிரஷாதனா, பிரஜீவனா, கஜன், பிரகாஷினி, கிருஷாந்தி, பிரசாந்தி, அனுஷாந்தி, ராஜீவ், லக்ஷிதா, புபேக்கா, புபிந்தன், சுபிதா, ஜீவிதன், சஞ்ஜீவன்.

தற்போதைய முகவரி:
473/4, இரத்தினம் அவனியு,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
''ஈஸ்வர பவனம்''
உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(சி/3244)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி. சீ. ஈ. சாதாரணதரம்

# கணிதம், விஞ்ஞானத்துக்கு மேலதிக பாடங்கள் அறிமுகம்

அச்சுவேலி, மார்ச் 29

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைகளில் விஞ்ஞானம், கணிதம்ஆகிய பாடங்களுக்கு மேலதிக பாடங்கள் 1999ஆம் ஆண்டில் இருந்து அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இப்பொழுது நடைமுறையில் உள்ள கணிதம், விஞ்ஞானம் என்பன எந்தவித மாற்றமும் செய்யப்படாமல் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

தற்போது நடைமுறையில் உள்ளது விஞ்ஞானம் II (பாடஇலக்கம் 41) கணிதம் II (பாட இலக்கம் 42) பாடங்களாகும்.

1999 ஆம் ஆண்டு மேலதிகமாக அறிமுகம் செய்யப்பட விருப்பது விஞ்ஞானம் I (பாட இலக்கம் 44) கணிதம் I (பாட இலக்கம் 45) எனவும் அழைக்கப்படும்.

இப்பாடங்களின் அடிப்படையிலேயே 2 ஆயிரமாம் ஆண்டிலும் அதற்கு பின்பும் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பில் கற்பதற்கானபாடரீதியிலான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை உயர் கல்வி அமைச்சு சகல பாடசாலைகளுக்கும் உயர் கல்வி அமைப்புக்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. (ஐ-11)

## ஈ. பி. டி. பி. சிரமதானம்

அச்சுவேலி மகா வித்தியாலய விளையாட்டுமைதானம் ஈ.பி.டி.பி. அமைப்பினரால் நேற்று சிரமதானஅடிப்படையில்துப்பரவுசெய்யப்பட்டது

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரின் வேண்டுகோளின்படி தனியாருக்குச் சொந்தமான இந்தக் காணியைத் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பெற்று பாடசாலைக்கு ஈ. பி. டி. பி. யினர் வழங்கியுள்ளனர்.

ஈ.பி.டி.பி. யின் அச்சுவேலிப் பொறுப்பாளர் ரகு தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-9)

## தீவக பதில் அதிபர்கள் புதிய சங்கம் அமைப்பு

நெடுந்தீவு, மார்ச் 29

தீவுப்பகுதியில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றுபவர்கள் இணைந்து ''தீவக பதில் அதிபர்கள் சங்கம்'' என்ற அமைப்பை அங்குரார்ப்பணம் செய்தனர்.

சுமார் ஐம்பதுக்கும் அதிகமான பதில் அதிபர்கள் கலந்து கொண்ட இந்த அங்குரார்ப்பணக் கூட்டம் வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தில் ஆ. சிவராசா தலைமையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றும் தங்களை நிரந்தர அதிபராக நியமிக்க நடவடிக்கை எடுக்கக் கோரும் மகஜர் ஒன்றையும் கல்வி அமைச்சர், மாகாண கல்விப்பணிப்பாளர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு அனுப்பி வைப்பதெனவும் அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ – 111)


## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த கும்பாபிஷேக தினம்

பிரதி வருடம் தோறும் நடைபெற்று வரும் மேற்படி கும்பாபிஷேக தின விழா நாளை 30 - 03 – 98 திங்கட்கிழமை காலை ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் மகேசுர பூசையுடன் நிறைவுபெறும்.

மேற்படி தினத்தில் மெய்யடியார்கள் முருகப் பெருமானைத் தரிசித்து அவரின் திருவருளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

முருகேசு சுவாமிகளின்
அடியார்கள் சார்பாக.

திரு. ஆ. அருணாசலம்

(சி-3243)



## முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி நடைபெறுவதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். அன்பர்கள் பணமாகவும், பொருள்கள் தந்தும், சிலவேலைகளை ஒப்பந்த ரீதியில் எம்மிடம் பெற்றும், ஓர் அன்பர் உள் வீதி தேரினை தனது செலவில் செய்து தருவதனையும் கூறுவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

ஆனால் சிலர் இச்சந்தர்ப்பத்தைப் பாவித்து உங்கள் கோயில் திருப்பணிவேலைகளுக்கு எனவும், வேறு பொய்க்காரணங்கள் கூறியும் பணம், பொருள்கள், அரிசி என்பன சேகரிப்பதைக் கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். நிர்வாகம் எவரையும் எவ்வடிவிலும் பணமோ பொருள்களோ சேகரிக்க அனுமதி வழங்கவில்லை.

நீங்கள் பொருளாகவோ, பணமாகவோ கோயிலுக்குச் செலுத்த விரும்பினால் கோயிலில் உள்ள களஞ்சியத்தில் கொடுத்து பற்றுச் சீட்டையும் பெற்றுக் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகிறோம். மேலும் பணமாக வங்கியில் செலுத்த விரும்பும் நண்பர்கள் இலங்கை வங்கி 5014 பருத்தித்துறை கணக்கிலும், தேசிய சேமிப்பு வங்கி 1002 பருத்தித்துறை கணக்கிலும் செலுத்துமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தா சபை,

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

(54357)


## யாழ்ப்பாணத்துக்குப்..

(7 ஆம் பக்கத் தொடர்)

ருக்குப் பெருமை சேர்ப்பனவாய் உள்ளன.

வீரமணி ஐயா அவர்கள் இத்தகைய சிறப்புக்களை எல்லாம் பெறுவதற்கு பக்கபலமாக இருந்தவர் அவரது வாழ்க்கைத் துணைவியாரானருக்குமணிஅம்மா அவர்கள். அழகும் அறிவும்நிறைந்த இவர் ஐயாவின் ஆக்கங்கள் ஒவ்வொன்றையும் மிகமிக ஆறுதலாக ஆராய்ந்து அவற்றில் உள்ள குறைநிறைகளைக் கூறி இவரின் ஆக்கங்களை மெருகூட்டி வந்தார்.

இவரது இழப்பு ஐயா அவர்களுக்கு மட்டுமல்ல இசையுலகிற்கே பெரியதோர் இழப்பாகும். ருக்குமணி அம்மா நோய்வாய்ப்பட்டிருந்த வேளை ஐயா அவர்கள் 24 மணி நேரமும் அம்மாவின் அருகே உட்கார்ந்து அவருக்குப் பிடித்தமான சாருகேசி இராகத்தினைக் காதோடு பாடிக் கொண்டிருந்த அந்த நிகழ்வு இன்றும் என் நெஞ்சை நெகிழச் செய்கிறது. இவரின் பிரிவுத் துயரில் இருந்த வேளையில் ஐயா அவர்கள் ருக்குமணி அம்மாவின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றும் பொருட்டும், அவரின் ஆத்ம சாந்திக்காகவும் அம்பாளின் அழகைக் கூறும் ''சௌந்தர்ய லஹரி'' எனும் 100 பாடல்களைக் கொண்ட நூலைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டார்.

வீரமணி ஐயாவின் இசைத் துறைச் சாதனைகளில் ஓங்கி உயர்ந்து நிற்பது, 72 மேளகர்த்தா ராகங்களுக்கு உருப்படி பாடி, சுரப்படுத்தி 108 தாளங்களில் அமைத்துள்ளார். இது எவரும் செய்யத் துணியாத, செய்ய முடியாத சாதனையாகும். இந்த உருப்படிகள் எதிர்கால இசையாளர்களுக்கு அருமருந்தாக விளங்க வல்லது. அதனை மனதிற் கொண்டு நூலுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

வரகவி, இசைவல்லாளன், நடனசிகாமணி ஆகியன ஒருங்கே அமைந்த பல்துறைப் பெருங் கலைஞன் வீரமணி ஐயர் அவர்கள் நீண்டு வாழ்ந்து அத்துறைகளை வளர்க்க அவரை வாழ்த்துவோம். ★

## யாழ்ப்பாணம்...

(7 ஆம் பக்கத் தொடர்)

வாக மிதிக்கத் தொடங்கினேன். எனக்குத் தெரிந்த யாழ்ப்பாணத்தை மறுபடி ஒரு முறை தேடிப் பார்க்கிறேன்; நான் நேசித்த யாழ்ப்பாணத்தை [illegible] போதும் நான் யாழ்ப்பாணத்தை நேசிக்கிறேன்

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 29

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9.24 முதல் 10.12 வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

இம் மகாகும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்கக் கிரியைகள் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் நடைபெற்றுவருகின்றன.

அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.15 மணிமுதல் நாளை மறுதினம் மாலை 5.00 மணி வரை இடம்பெறும். மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது. (ஐ–8-30)

★ ★ ★

மல்லாகம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் சமேத வீரபத்திரப் பெருமான் கோயில் புனராவர்த்தன சம்புரோக்ஷன மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 10.30வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

இப்பெருவிழாவுக்கான பூர்வாங்க கிரியைகள் நேற்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ–8–30)

★ ★ ★

விசுவத்தனை முருகப்பெருமான் ஆலயத்தில் மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளாகிய நாளையும், 8 ஆம் திருவிழாவாகிய எதிர்வரும் 7 ஆம் திகதியும் பின்னர் தேர் தீர்த்தத் திருவிழா தினங்களிலும் மற்றும் சங்காபிஷேக தினமாகிய எதிர்வரும் 17 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதான சபையினரால் மேற்படி உற்சவங்களில் அன்னதானம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ-8-30)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரியம்பாள் ஆலயத்தில் சௌபாக்கிய கௌரி விரத பஞ்சவிம்சதி கலசாபிஷேகப் பெருவிழா (திருக்குளிர்த்தி) நாளை 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

அரியாலை மேற்கு அருள்மிகு ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அன்னதானவைபவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் நடைபெறும். (ஐ–30)

★ ★ ★

கைதடி கையித்தசிட்டி அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோயில் வருடாந்த இலட்சார்ச்சனை பூர்த்தி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

விசேட 1008 கலச சங்காபிஷேகம், பூசைகள் ஆலயப் பிரதம குரு பிரம்ம ஸ்ரீ க.மு. கணேசையாக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

★ ★ ★

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாணர் வேத விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதுவருடப்பிறப்பன்றுதேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஐ-8–30)

★ ★ ★

## அரையிறுதி ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 29

மதிவதனன் ஞாபகார்த்தமாக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 12 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று காலை 8-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

இந்த அரையிறுதி ஆட்டங்களில் சென்றலைட்ஸ் கொக்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய 'பி' அணியும் —

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. அணியை எதிர்த்து மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழக அணியும் — மோதவுள்ளன.

இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்த இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ். இராஜதுரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ)

## கோழித்தீனில் கலப்படம்

யாழ். குடா நாட்டில் கோழித்தீன் வகைகளின் விலை அதிகரித்துள்ளது.

விலை அதிகரிப்பைப் பயன்படுத்தி தரம் இல்லாத கலப்படம் செய்யப்பட்ட கோழித்தீன் வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

முட்டையின் விலை குறைந்த நிலையில் கோழித்தீனின் விலை அதிகரிப்பும் - தரக்குறைவான கலப்படக் கோழித்தீன் விற்பனையும் - கோழி வளர்ப்போரைக் கவலை அடையச் செய்துள்ளன. (ஐ–11)


## 24 மணி நேர தொலைபேசிச் சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி
தேவைகளை உடனுக்குடன் காலதாமதம் இன்றி
பெற்றுக்கொள்ள நேற்று முதல்
வண்ணை சிவன்கோயில் அருகில்

**குமார் ஏஜென்ட்**

இல. 367, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 – 2999

சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு
ரவுசர் தினுசுகள் தொடக்கம் அனைத்து
ரக புடைவை வகைகளையும் மலிவுவிலையில்
பெற்று தைத்துப்பெற்றுக் கொள்ள

**சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்**

(புடைவை தினுசுகளின் ராஜமுத்திரை)
இல. 73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(5441g)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை உயர்ந்த முத்திரைகளை அதிக அளவில் எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்டத்தின்பாவனைக்காக 500 ரூபா, ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் இம்முறை அதிகளவில் எடுத்துவரப்பட உள்ளன.

யாழ். மாவட்டத்தில் இவ்வகை முத்திரைகளின் பயன்பாடு குறைவாகக் காணப்பட்டு வந்தமையால் இதுவரையும் ஒன்பது இலட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகளே இங்கு எடுத்துவரப்பட்டு வந்தன. ஆனால் தற்போது இவ்வகை முத்திரைகளின் பயன்பாடுஅதிகரித்துள்ளமையால் இம் முறை 18 இலட்சம் ரூபா பெறுமதியான இவ்வகை முத்திரைகள் இங்கு எடுத்து வரப்பட உள்ளன.

இந்த முத்திரைகளை இங்கு எடுத்து வருவதற்கு தபால் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ள போதிலும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை எனவும் —

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் இந்த முத்திரைகள் இங்கு எடுத்து வரப்படும் எனவும் அஞ்சல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒருவார காலத்தினுள் அனுமதி கிடைக்கும் என தாம் எதிர் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-9)

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். இராமநாதன் வீதியிலுள்ள ஞானக் குழந்தை இல்ல மாணவர்களின் பேச்சுத்திறன் காணும் வைபவம் இன்று காலை 9.00 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் செல்வி தி. மீனலோஜினி தலைமையில் நடைபெறும். (இ-9)

## செல்வா நூற்றாண்டு தினம்

## நாதஸ்வர இசையை ஒலிபரப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 29

தந்தை செல்வா நூற்றாண்டு தினமான எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தந்தைக்குப் பிடித்தமான நாதஸ்வர இசையை ஒலிபரப்புமாறு வர்த்தக விளம்பர நிறுவனங்களையும் திரைப்பட வீடியோ பட அரங்குகளையும் யாழ், வர்த்தக சங்க செயலாளர் எஸ். நமசிவாயம் கோரியுள்ளார்.

குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு இக்கோரிக்கை தொடர்பான கடிதங்களை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினால் தந்தை செல்வாவின் நூற்றாண்டு தினத்தையொட்டி எதிர்வரும் 31ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு சுண்டுக்குளி புனித யோவான் தேவாலயத்தில் வழிபாடு ஒன்று நடத்தப்படவுள்ளது. (இ-5)

## கொடுப்பனவு

யாழ். மாவட்டத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது யாழ். தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-100)

## மத்தியஸ்த...

(முதலாம் பக்கத் தொடர்)

களைத் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றது.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாணும் விதத்தில்சம்பந்தப்பட்டோர் தீவிரம் காட்டினால் தவிர ஒரு நாட்டின் பிரச்சினையில் பிரிட்டிஷ் அரசு தலையிட விரும்பாது.

பிரிட்டிஷ் அரசுக்கு ஒரு பிரச்சினை அச்சுறுத்தலாக அமைந்தால் மட்டுமே அதில் தன்னிச்சையாகத் தலையிட முடிவு செய்யும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)


**LION AIR விமானசேவை**

**அறிவித்தல்**

LION AIR முதலாவது விமானத்தில் பயணம் செய்ய (30-3-98) திங்கள் பதிவு செய்த கீழ்க் காணும் பயணிகளும்

திருமதி அன்னபாக்கியம் மைக்கேல்
திரு. எம். உதயசீலன்
செல்வி எம். ரஜினி.

திருமதி பி. கந்தையா
திருமதி எஸ். ரி. பாலசுப்பிரமணியம்
திரு. பி. சண்முகம்

திரு. ஐ. சிவசுப்பிரமணியம்
திருமதி ஐ. பரமேஸ்வரி

இரண்டாவது விமானத்தில் பயணம் செய்ய பதிவு செய்த கீழ்க்காணும் பயணிகளும்

திரு. எஸ். மணிவண்ணன்
திரு. எஸ். என். ரூபாகரன்
திருமதி என். லக்ஸ்மி
செல்வி. எஸ். விஜயா
திரு. எஸ். நமசிவாயம்
திருமதி பி. தம்பையா

குறித்த தினத்தில் பயணம் செய்ய முடியாதுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம், இவர்கள் மறுதினம் 31—3—98 (செவ்வாய்) முதலாவது விமானத்தில் பயணம் செய்யமுடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

- முகாமையாளர்,
லயன்எயர்

(சி/3250)



எமது ஒறிஜினல் வெளியீடு!

★ தாய் உள்ளம்
★ பயணிகள் கவனிக்கவும்
★ புரியாத புதிர்
★ விடுதலை
★ மலைக் கள்வன்

வீடியோ CD வெளியீடு!

★ வேட்டியை மடிச்சுக்கட்டு
★ எஜமான்
★ அண்ணாமலை
★ பாண்டியன்

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.

(சி/3253)


# ஹஜ், சிவராத்திரி விடுமுறை நாள்களில் பொதுப் பரீட்சைகள் நடைபெறா

கொழும்பு, மார்ச் 29

ஹஜ் மற்றும் சிவராத்திரி விடுமுறை தினங்களில் பொதுப் பரீட்சைகள் எவையும் நடைபெறமாட்டாது என அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீரா பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

துறைமுக, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் முன்வைத்த வேண்டுகோளை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது விடுமுறைகளைக் குறைப்பது என அரசு மேற்கொண்ட முடிவின்படி மேற்படி விடுமுறைகள் அந்தந்த சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமே ஏற்புடையது என்பதால் ஏதாவது பொதுப் பரீட்சைகளை அந்த விடுமுறை தினங்களில் நடத்தினால் அந்த மதத்தினருக்கு அசௌகரியங்கள் ஏற்படும் என்ற காரணத்தினாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## இலக்கியப் பரிசு

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் நடந்த 1996 ஆம் ஆண்டுக்கான இலக்கியப் பரிசுப்போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன.

நாவல்:- வ. அ. இராசரத்னம்.

சிறுகதை:- மு. பொன்னம்பலம்.

கவிதை:- நா. தர்மராஜன், ஜின்னா செரிப்தீன்.

சிறுவர் இலக்கியம்:- ச. அருளானந்தம்.

சமயம்:- க. மகேஸ்வரலிங்கம்

ஆய்வு:- பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், கலாநிதி காரை. செ. சுந்தரம் பிள்ளை.

பல்துறைக்கான பரிசுகளை அன்ரனி நோபெட், க. ரகுராகவன் கு. சோமசுந்தரம், கே. எஸ். சிவகுமாரன் ஆகியோர் பெறுகிறார்கள். (இ-9)

## இலங்கை வங்கி சீட்டிழுப்பு

இலங்கை வங்கி சிறுவர் சேமிப்பை ஊக்குவிப்பதற்காக ஆரம்பித்துள்ள சிறுவர் பொன் அரும்புக் கணக்கு சீட்டிழுப்பு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலங்கை வங்கியின் யாழ். உயர்தரக் கிளையில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கலந்துரையாடல்

கோப்பாய் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கள் பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக கோப்பாய் கல்விக் கோட்ட அலுவலர் ஆ. ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (இ-7)

## வடக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)

மில் தங்கியுள்ள மக்களையும் பல திணைக்களத் தலைவர்களையும், நகர சபை உறுப்பினர்களையும் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் பற்றியும் வவுனியா அபிவிருத்திக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அவர் கேட்டறிந்தார்.

வெளிக்குளத்தில் அமைக்கப்பட்ட ஔவையார் சிலை ஒன்றையும் அவர் திறந்து வைத்தார். அவர் இன்றும் பல முக்கியஸ்தர்களைச் சந்தித்து அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி கலந்தாலோசிப்பார் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-9-7-164)

## பொருளியல்..

(முதலாம் பக்கத் தொடர்)

லப்பட்டனர்.

பிரஸ்தாப பொருளியல் ஆசிரியர் 1996 ஆம் ஆண்டு கொழும்பில் தங்கியிருந்த சமயமும் கைதாகி சுமார் ஒரு மாத காலம் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே இவர் மீண்டும் கைதாகி இருக்கலாம் என நம்பப்படுகிறது. (இ)

## நிந்தவூர்...

(முதலாம் பக்கத் தொடர்)

படுகாயமடைந்தனர். இறைவனின் ஆசியும் வழிகாட்டலும் எனது பக்கம் இருந்தபடியால் எனது வாகனத் தொடர் சம்பவம் நடந்த இடத்திலிருந்து 100 யார் தூரத்தில் தாமதிக்க வேண்டியிருந்தது. இதனால் தெய்வாதீனமாக தப்பி விட்டோம்.

நான் விடுதலைப் புலிகளிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால் நீங்கள் எந்த பேரினவாத சக்திகளுக்கு எதிராக ஆயுதங்களைத் தூக்கினீர்களோ அதற்கு எதிராக அதைப் பாவியுங்கள் என்பதே.

சகோதர சமூகங்களுக்கு எதிராக சகோதர சமூகங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அந்தச் சமூகத்தின் தலைமைத்துவத்திற்கு எதிராக உங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தாதீர்கள்.

எனது உயிர் ஒரு சமூகத்தின் அரசியல் போராட்டத்திற்கான தலைமைத்துவத்திற்கான உயிராகும்.

சகோதர சிறுபான்மை இனமான முஸ்லிம் சமூகத்தின் விடுதலைப் போராட்டத்தை அமுக்கி விடலாம் தடுத்து விடலாம் என எவரும் நினைத்தால் அவர்கள் வெற்றி பெறமாட்டார்கள். துரதிர்ஷ்ட வசமாக இந்தப் பிராந்தியத்தில் இருக்கின்ற பாதுகாப்பு நிலை எம்மை கவலை கொள்ளச் செய்கிறது.

இப்படி அவர் கூறினார். (இ-5)

## நம்பிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

விவாத இறுதியில் பிரதமர் வாஜ்பாய் சுமார் 50 நிமிட நேரம் உரை நிகழ்த்தினார்.

மத்திய அரசில் ஆர். எஸ். எஸ். அமைப்பின் தலையீடு வெளிநாட்டுக் கொள்கை உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு பதில் அளித்து அவர் உரை நிகழ்த்தினார்.

ஆர். எஸ். எஸ். அமைப்பின் தலையீடு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அவர் பதில் அளிக்கையில், ''றிமோட் கொன்றோல்'' அரசாக பாரதீய ஜனதா அரசு இருக்கப் போவதில்லை என்று கூறினார்.

வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் எதுவும் இருக்க மாட்டாது என்றும்வாஜ்பாய் கூறினார்.

இரவு 9-00மணிக்கு சற்றுப் பின்னர் நம்பிக்கைத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டது.

சபாநாயகர் ஜி. எம். ஜி. பாலயோகி நாளை திங்கட்கிழமை வரை சபையை ஒத்தி வைத்தார். (இ-7-9)


மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

**யாழ். 'சீமாட்டி'யின் புத்தாண்டு**

**மலிவு விற்பனை**

மலரும் புத்தாண்டை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட

புத்தம் புதிய தரம்மிக்க வர்ண வர்ண ஜவுளித்தினுசுகள்

அனைத்தும் 10% முதல் 30% வரை கழிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!

இந்தச் சலுகை மார்ச் 30 தொடக்கம் ஏப்ரல் 14 வரையே

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்!

**சீமாட்டி (ஜவுளி சமுத்திரம்)**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**மங்கை சில்க்**
15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**மங்கை சில்க்**
8, நவீன சந்தை,
சுன்னாகம்.

(சி/3233)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org